**TNEB**

**எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்**

மலர்-3 ✧ இதழ்-7 ✧ பிப்ரவரி 2021

நிர்வாக ஆசிரியர்

**அ. சேக்கிழார்**

ஆசிரியர் குழு

**சு. மணிகண்டன்**
**J.L. பாஸ்டின் ராஜ்**
**S. இராமநாதன்**
**K. செல்வராஜு**
**R. ஜெயராமன்**
**வீ. பாரதி**

செயலாளர் (வெளியீடு)

**A. செந்தில்குமார்**



39/101, சிங்கண்ணா தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002.
✆ : 9841446621
tnebemployeesfederation3600@gmail.com


# போராட்டக் களத்தில் முன் நிற்போம்!

**மி**ன்சார சட்ட திருத்தம் 2020ஐ திரும்பப் பெறக் கோரியும், புதுதில்லியில் தொடர்ந்து போராடி வரும் விவசாயிகளுக்கு ஆதரவாகவும் பிப்ரவரி திங்கள் 3ம் நாள் இந்திய தேசம் முழுவதும் மின்சாரத் தொழிலாளர்களும், பொறியாளர்களும் கலந்து கொண்ட வேலை நிறுத்தத்தில் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ஒரு நாள் வேலை நிறுத்தம் மேற்கொண்டோம். பெருமளவில் கலந்து கொண்ட அனைவருக்கும் வாழ்த்துகளை உரித்தாக்குவோம்.

டிசம்பர் 21 முற்றுகைப் போராட்டத்தின் பின்னர் தொடர்ச்சியாக இயக்கங்கள் நடந்து கொண்டிருக்கும் வேளையில் மின்சார வாரியத்தின் போக்கில் மாற்றமில்லை என்பதாலே BP 82ஐ திரும்ப பெற்றிருந்தாலும் BP1ன் வழியாக தனது அவாவை பூர்த்தி செய்து கொண்டிருக்கிறது வாரியம்.

மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களின் அழைப்பின் பேரில் இருமுறை கோட்டையில் பேச்சுவார்த்தை நடந்திருந்தபோதிலும் எந்த பிரச்சினைக்கும் தீர்வு என்பது இல்லாத நிலையில் போராட்டத்தில் ஈடுபட்ட தொழிற்சங்கங்களுக்கு அங்கீகாரத்தையும், பேச்சு வார்த்தைக்கு கலந்து கொள்ளும் தன்மையும் ஏன் நீக்கக் கூடாதென Show Cause Notice அளித்து வாரியம் தொழிற்சங்கங்களின் மீதான கோபத்தை தணித்துக் கொள்ள எத்தனித்த வேளையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்ற பின்னரும் அமைச்சரின் அறிவுறுத்தலை மீறி வாரியம் நோட்டீஸ் வழங்கியது. பின்னர் தொழிற்சங்கங்களின் கூட்டுக்குழுவின் சார்பாக அடுத்தக் கட்ட போராட்டத்திற்கு தயாரிப்பு பணிகள் முடுக்கிவிடப்பட்ட நிலையில் வாரியம் உத்தரவை திரும்ப பெற்றுள்ளது. இவ்வுத்தரவில் வாரியம் வரலாற்றுப் பிழையைச் செய்திருக்கிறது.

CMD மற்றும் JMDஐ மாற்றிடாவிட்டால் போராட்டங்கள் தொடரும் என்பதை தமிழக அரசு உணர்ந்திடல் வேண்டும்.

நெல்லை மண்டலக் கூட்டத்திற்கு பின்னர் அடுத்ததாக ஈரோடு, கோவையில் பிப்ரவரி 27 மற்றும் 28ம் தேதிகளில் நடைபெற உள்ள மண்டலக் கூட்டங்களில் அமைப்பை மேலும் வலுப்படுத்திட ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

தமிழகத்தின் புதிய தலைமைச் செயலாளராக பொறுப் பேற்றிருக்கும் Dr. ராஜீவ்ரஞ்சன் அவர்களின் பணி சிறக்க வாழ்த்துகளைத் தெரிவிப்போம். முன்னாள் மின்வாரியத் தலைவர் என்பதும் நமக்கு கூடுதல் பெருமையாகும்.

மின்சார வாரியத்தை தனியார்மயமாக்கவும், மின்சார வாரியத்தின் பதவிகளை ஒழித்து தொழிலாளர் விரோதப் போக்கை கையாண்டும், தொழிற் சங்கங்களை அவமதிக்கும் நிலையிலும் இதுவரை வாரியம் வெளியிட்டுள்ள அனைத்து உத்திரவுகளையும் திரும்ப பெற வைக்க தொடர்ந்து போராடுவோம், தீர்க்கப்படாத நமது கோரிக்கைகளுக்கு முடிவு கண்டிட களத்தில் முன் நிற்போம்.

**- ஆசிரியர்**



## தமிழகத்தின் புதிய தலைமைச் செயலர் அவர்கள் நியமன ஆணை

### ABSTRACT

**Posting - Rajeev Ranjan, IAS (Dr.) - Notified.**

---

Public (Special A) Department

**G.O. Rt. No. 307** **Dated : 31.1.2021**
Saarvari, Thai - 18,
Thiruvalluvar Aandu 2052

**Read :**

From the Secretary, Appointments Committee of the Cabinet & Establishment Officer, Ministry of Personnel, Public Grievances and Pensions, Department of Personnel and Training, New Delhi letter No. 36/01/2021-EO (Sm-I), dated : 27.01.2021

****

**ORDER :**

The following posting is notified:

Dr. Rajeev Ranjan, IAS, Secretary to Government of India, Department of Fisheries, Ministry of Fisheries, Animal Husbandry and Dairying, on reversion to State Cadre, is posted as Chief Secretary to Government vice Thiru K. Shanmugam, IAS, retiring from service on the afternoon of 31.01.2021.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**K. SHANMUGAM**
Chief Secretary to Government

# தமிழ்நாடு மின்வாரிய தொழிற்சங்க கூட்டு நடவடிக்கைக்குழு

**சென்னை**

**அனைவருக்கும் வணக்கம்.**

தமிழ்நாடு மின்வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு கூட்டம் நேற்று 04.02.2021 மறறும் இன்று 05.02.2021 நடைபெற்றது. இக்கூட்டத்தில் மின்வாரியத் தலைவரின் தொழிலாளர் விரோத தொழிற்சங்க விரோத நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. கடந்த 21.12.2020 அன்று நடைபெற்ற காத்திருப்பு போராட்டத்தை நடத்தியதற்காக தொழிற்சங்கங்களுக்கு ஏன் அங்கீகாரத்தையும், பேச்சுவார்த்தையில் பங்கேற்கும் உரிமையையும் ரத்து செய்யக் கூடாது என Show Cause நோட்டீஸ் மின்வாரிய நிர்வாகம் வழங்கியது மாண்புமிகு மின்துறை அமைச்சரின் அறிவுறுத்தலின் பேரில் வாரிய நிர்வாகம் திரும்ப பெற்றுக் கொண்டது. ஆனால், திரும்ப பெற்றுக் கொண்ட உத்தவில் தொழிற்சங்கத்தை அவமானப்படுத்துகின்ற வகையில் வாசகம் இடம் பெற்றிருந்ததை கூட்டுக்குழு ஏற்றுக் கொள்ளவில்லை. தொடர்ந்து தொழிலாளர் விரோத நடவடிக்கையை எடுத்து தொழிற்சங்கங்களை அவமதிக்கின்ற வாரியத் தலைவரின் நடவடிக்கையை கண்டித்து 08.02.2021 அன்று காலையில் அனைத்து பிரிவு அலுவலகம் முன்பும், மதிய உணவு இடைவேளையில் செயற்பொறியாளர் அலுவலகம் முன்பும், மாலையில் அனைத்து வட்ட மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பும் கீழ்கண்ட கோரிக்கையை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே, வட்ட அளவில் உள் தொழிற்சங்க கூட்டு நடவடிக்கைக் குழுவினை உடனடியாக கூட்டி போஸ்டர் மற்றும் ப்ளக்ஸ் பேகர் போன்றவைகளை அச்சடித்து ஆர்ப்பாட்டத்தை வெற்றிகரமாக நடத்திட கேட்டுக் கொள்கிறோம்.

## கோரிக்கைகள்

**மத்திய அரசே! மாநில அரசே!**

- ★ மின்வாரியப் பணிகளை ஒப்பந்த முறையில் தனியாரிடம் ஒப்படைக்காதே!
- ★ மின்விநியோகத்தை தனியார் வசம் ஒப்படைக்காதே!

**மின்வாரியமே!**

தொழிற்சங்கங்களை தொடர்ந்து அவமதிக்கும் நடவடிக்கையை கைவிடுக!

**தமிழக அரசே!**

- ★ தொழிலாளர், பொறியாளர் மற்றும் அலுவலர் விரோத நடவடிக்கையை எடுத்து மின்துறையை சீரழிக்கும் CMD மற்றும் JMD இருவரையும் இடமாற்றம் செய்திடுக!

தமிழ்நாடு மின்வாரிய தொழிற்சங்க கூட்டு நடவடிக்கைக்குழு

# தமிழ்நாடு மின்வாரிய தொழிற் சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு

பெறுநர் : **பத்திரிகை செய்தி** நாள்: 10.02.2021

**செய்தி ஆசிரியர்,**
தினசரி நாளிதழ்கள் / தொலைக்காட்சி
சென்னை.

அன்புடையீர், வணக்கம்.

கீழ்கண்ட பத்திரிகை செய்தியினை தங்களது மேலான பத்திரிகையில் வெளியிடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

## தமிழக மின்வாரிய கட்டமைப்பை சிதைக்கும் வாரிய நிர்வாகம்

தமிழக மின்வாரியம் ஒரு சேவைத் துறையான பொதுத்துறை நிறுவனமாகும். 1967-லிருந்து தமிழக அரசினுடைய மின்சார சம்மந்தமான அனைத்து உத்தரவுகளையும் குக்கிராமங்கள் வரை கொண்டு சென்று அரசினுடைய நடவடிக்கைக்கு பெருமை சேர்த்தவர்கள் மின்வாரிய ஊழியர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள் ஆவர். மின்வாரியத்தின் வளர்ச்சியில் இரவுப்பகலாக தன்னலம் கருதாமல் பொது நலம் கருதி பணியாற்றியவர்கள்.

மத்திய அரசின் மின்சார சட்டத்திருத்த மசோதா 2020-ஐ (தற்போது 2021) தமிழகத்தில் அமலாக்குவதற்கு தமிழக அரசு கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என தெரிவித்து தற்போது வரை மாநில அரசு தொடர்ந்து எதிர்ப்பினை பதிவு செய்து வருகிறது. இந்த சட்டத்திருத்த மசோதா அமலானால் ஏற்படும் பாதிப்புகளை தமிழக அரசு உணர்ந்துள்ளது என்பதை காண முடிகிறது.

ஆனால் அரசின் இந்த நடவடிக்கையை கணக்கில் கொண்டு தமிழக மின்வாரியம் பொதுத்துறையாக நீடித்திட பல்லாயிரக்கணக்கான காலிப்பணியிடங்களை நிரப்பிட தற்போதைய வாரியத்தலைவர், நடவடிக்கை எடுக்காமல், தனியார் மயப்படுத்தும் நோக்கத்தில் வாரிய பணிகளை Works Contract மற்றும் அவுட் சோர்சிங் முறையில் விடுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார். கடந்த 21.12.2020 அன்று தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் தன்னெழுச்சியாக நடத்திய காத்திருப்பு போராட்டத்தின் விளைவாக மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் தலையிட்டு தொழிலாளர்கள், பொறியாளர்கள் உணர்வுகளை புரிந்து கொண்டு விநியோக பிரிவுகளில் விடப்பட்ட அவுட் சோர்சிங் உத்தரவையும், துணை மின் நிலையங்களை பராமரிக்கவும், இயக்கவும் தனியாருக்கு விடப்பட்ட உத்தரவுகளையும் ரத்து செய்ய வாரியத் தலைவருக்கு உத்தரவிட்டு போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்தார். இது தமிழக அரசின் மேல் தொழிலாளர்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தியது.

மின்வாரியத்தில் 52,000-ம் காலிப் பணியிடங்கள் இருக்கின்ற நிலையில் கூடுதல் பணிகளை பணிச்சுமையோடு ஊழியர்கள் செய்து வருகின்றனர். ஆரம்பக்கட்ட பதவிகளான களஉதவியாளர் (ITI) 29000, உதவிப் பொறியாளர்கள் 600, கணக்கீட்டாளர்கள் 1300, தொழில்நுட்ப உதவியாளர்கள் 300, இளநிலை உதவியாளர்கள் 500 ஆகிய பணிகளுக்கு தேர்வு செய்வதாக அறிவித்து ஆண்டுகள் கடந்து விட்டது.

அதே போல, கேங்மேன் பணியாளர்களை எடுப்பதும் பல ஆண்டுகளாக மின்வாரியத்தில் பணியாற்றிய ஒப்பந்த ஊழியர்களை அடையாளம் கண்டு முத்தரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில்

தினக்கூலியாக ரூ. 380/- வழங்கிட நடவடிக்கை எடுக்காமல், அவுட் சோர்சிங் முறையை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

தானே புயல், சென்னை பெருவெள்ளம், கஜா புயல், ஒக்கி புயல் போன்ற இயற்கை பேரிடர் காலங்களில் மின்வாரிய பணியாளர்களின் பணி அனைவராலும் பாராட்டப்பட்டது. அரசு நிர்ணயித்த கால அளவைவிட முன்கூட்டியே பணிகளை செய்து மக்களுக்கு தடையில்லா மின்சாரத்தை வழங்கியவர்கள் தமிழக மின்வாரிய பணியாளர்கள். சமீபத்தில்கூட 2020 நவம்பர் 26ல் மத்திய அரசின் தனியார்மய கொள்கையை எதிர்த்து மின்வாரிய தொழிற்சங்கள் வேலை நிறுத்த அறிவிப்பு கொடுத்திருந்த நிலையிலும், தமிழகத்தை நிவர் புயல் தாக்கும் என அறிவிப்பு வந்தததை அடுத்து மக்களின் நலன் கருதி, வேலை நிறுத்தத்தை விலக்கிக் கொண்டு நிவர் புயல் பணிகளில் ஈடுபட தயாராக இருந்தவர்கள் மின்வாரிய பணியாளர்கள்.

மின்வாரியத்தில் காலிப் பணியிடங்களை நிரப்பாமல் கூடுதல் பணிச்சுமைகளோடு பணியாற்றி வரும் பணியாளர்களின் நிலையை கணக்கில் கொள்ளாமல் வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கும் படித்த இளைஞர்களின் கனவுகளையும், மின்வாரிய நிர்வாகம் தட்டிப் பறிக்கிறது.

தமிழக மின் உற்பத்தி நிலையங்களில் மின் உற்பத்தியை முழுவீச்சில் துவக்கி அதன் பின் தேவைகளுக்கேற்ப மின்சாரத்தை கொள்முதல் செய்வது, சரியான நடவடிக்கையாக அமையும். ஆனால் பழமை வாய்ந்த தூத்துக்குடி, மேட்டூர் போன்ற இடங்களில் உள்ள அனல்மின் நிலையங்களை நவீனப்படுத்த வாய்ப்புகள் இருந்தும் நவீனப்படுத்தாமல் அங்கு உற்பத்தியை நிறுத்தி தனியாரிடம் அதிக விலை கொடுத்து மின்சாரத்தை வாங்குவதால் மாநில மின்வாரியம் கடும் நிதி நெருக்கடியை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மின்சார விநியோகம், மின் உற்பத்தி ஆகியவை தனியாரை நோக்கி செல்லுமேயானால் மின்சாரம் அத்தியாவசிய பொருட்களிலிருந்து சந்தைப் பொருளாக மாறுவதோடு மக்கள் அதிக விலைக்கு மின்சாரத்தை வாங்க நேரிடும்.

இது போன்ற தவறான நடவடிக்கைகளை எடுத்து வருவதுடன், புதிய மின் உற்பத்தி திட்டங்களில் பணியாற்றி வரும் ஊழியர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களை பதவியிறக்கம் செய்தும் மற்றும் பணியிட மாற்றமும் செய்து உத்தரவுகள் வெளியிடுகிறார். புதிய உற்பத்தி திட்டங்களில் கட்டுமான பணிகளில் தொய்வு ஏற்படுவதுடன், ஊழலுக்கும் வழி வகுக்கும் என சுட்டிக்காட்டிய பின்பும் வாரிய நிர்வாகம் உணர மறுக்கிறது. அதே போல செயலகப் பிரிவு, நிர்வாகப் பிரிவு போன்றவற்றில் இதே நடவடிக்கையை எடுத்து வருகிறார்.

இது தொடர்பாக மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களிடம் பலமுறை பேச்சுவார்த்தை நடத்தியும் வாரியத் தலைவரின் நடவடிக்கையில் மாற்றம் ஏற்படவில்லை.

தொழிற்சங்கங்கள் இவற்றையெல்லாம் சுட்டிக்காட்டி கடந்த டிசம்பர் 21-ல் நடத்திய காத்திருப்பு போராட்டத்திற்காக தொழிற்சங்கங்களின் அங்கீகாரத்தையும் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் உரிமையையும் ஏன் ரத்து செய்யக்கூடாது என காரணம் கேட்கும் குறிப்பாணையை வாரிய நிர்வாகமே வழங்கி, அதற்கு மறுநாளே மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களின் தலையீட்டின் பேரில் வாரிய நிர்வாகம் தொழிற்சங்கங்களின் மீது தவறான வார்த்தையை (Erring Union) பிரயோகித்து அந்த உத்தரவை ரத்து செய்தனர். ரத்து செய்த உத்தரவில் உள்நோக்கத்தோடு தொழிற்சங்கங்களை அவமதிக்கின்ற வகையில் தவறான வார்த்தையை பயன்படுத்தி உத்தரவை ரத்து செய்தது தொழிற்சங்கங்கள் மத்தியிலும், தொழிலாளர்கள் மத்தியிலும் கடும் கொந்தளிப்பை உருவாக்கி உள்ளது.

இதுவரை மின்வாரிய நிர்வாகத்தில் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநராக பதவி வகித்த மூத்த IAS அதிகாரிகள் தொழிற்சங்கங்களின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கேட்பார்கள். இது மின்வாரியத்தின் 63 ஆண்டுகால வளர்ச்சிக்கு உதவியது. ஆனால் தற்போது மின்வாரியத்தில் தமிழக அரசால் நியமிக்கப்பட்டுள்ள மூன்று IAS அதிகாரிகள், அனுபவம் வாய்ந்த இயக்குநர்கள் மற்றும் மூத்த பொறியாளர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்காமலும், தொழிற்சங்களின் ஆலோசனையை புறந்தள்ளியும் மின்வாரிய கூட்டமைப்பை சீர்குலைத்து வருகிறார்கள்.

எனவே, தமிழக அரசுக்கு அவப்பெயரை உருவாக்கி மின்வாரியத்தின் கட்டமைப்பை சீர்குலைத்து வரும் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. பங்கஜ் குமார் பன்சால், இ.ஆ.ப., அவர்களையும், இணை மேலாண்மைஇயக்குநர் திரு. வினித், இ.ஆ.ப., அவர்களையும் மின்வாரியத்தின் நிர்வாகத்திலிருந்து இடம் மாற்றம் செய்து தொழில் அமைதி காத்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

தமிழக அரசு உடனடி நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் வேறு வழியில்லாமல் காலவரையற்ற வேலை நிறுத்தத்திற்கு மின்வாரிய பணியாளர்கள் செல்ல நேரிடம் என்பதை தமிழக அரசின் கவனத்திற்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

இவண்

**தமிழ்நாடு மின்வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு,** சென்னை

## கேரள மாநில அரசு ஊழியர்களுக்கு அகவிலைபடி உயர்வு

**GOVERNMENT OF KERALA**
**ABSTRACT**

Payment of Dearness Allowance to State Government Employees and Dearness Relief to State Service Pensioners / Family Pensioners - Revised rates effective from 01.01.2018, 01.07.2019, 01.01.2020 and 01.07.2020 - Orders Issued

---

**FINANCE (PAY RESEARCH UNIT) DEPARTMENT**

**G.O.(P) No. 25/2021/Fin.** **Dated, Thiruvananthapuram, 08.02.2021**

---

*Read.*
1. *G.O.(P) No. 7/2016/Fin, dated 20/01/2016*
2. *G.O.(P) No. 9/2016/Fin, dated 20/01/2016*
3. *OM-DA No. 1/1/2019-E-II(B) GoI dated 27/02/2019 of the Department of Expenditure, Ministry of Finance, Government of India.*
4. *OM-DR No. 42/04/2019-P&PW(D) GoI dated 06/03/2019 of the Department of Pension and Pensioners Welfare, Ministry of Personnel, Public Grievances and Pensioners, Government of India.*
5. *OM-DA No. 1/3/2019-E-II(B) GoI dated 14/10/2019 of the Department of Expenditure, Ministry of Finance, Government of India.*

6. *OM DR No. 42/04/2019-P&W (D) dated 21/10/2019 of the Department of Pension and Pensioners Welfare, Ministry of Personnel, Public Grievances and Pensioners, Government of India.*
7. *G.O. (P) No. 629/2013/Fin dated 23/12/2013.*
8. *G.O. (P) No. 61/2016/Fin. dated 05/05/2016*
9. *G.O. (P) No. 6/2017/Fin. dated 19/01/2017*
10. *G.O. (P0 No. 55/2017/Fin dated 26/04/2017*
11. *G.O. (P) No. 74/2017/Fin dated 27/05/2017*
12. *G.O. (P) No. 84/2018/Fin dated 07/06/2018*
13. *G.O. (P) No. 44/2019/Fin dated 04/04/2019*
14. *G.O. (P) No. 151/2020/Fin dated 05/11/2020*
15. *G.O. (P) No. 21/2021/Fin dated 04/02/2021*
16. *PM/2/3/19-20-259 - dated 05.02.2021. Letter from Accountant General*
17. *G.O. (P) No. 18/2019/HEDN dated 29.06.2019*
18. *G.O. (P) No. 55/2021/HEDN dated 02.02.2021*
19. *G.O. (P) No. 149/2020/Fin dated 05.11.2020*

*****

**ORDER :**

In the Office Memoranda cited above, Government of India sanctioned revised rate of Dearness Allowance / Dearness Relief to Central Government employees, Pensioners and Family Pensioners with effect from 01.01.2019, 01.07.2019, 01.01.2020 and 01.07.2020. On the absis of the above, the following orders are issued.

2. (i) The rate of Dearness Allowance payable in respect of State Government Employees, Teachers, Staff of Aided Schools, Private Colleges and Polytechnics, Full Time Employees borne on the contingent and work charged establishemnts and employees of Local Boides will be enhanced from the existing rate of 20% to 23% w.e.f.01.01.2019, 28% w.e.f. 01.07.2019, 32% w.e.f. 01.01.2010 and 36% w.e.f. 01.07.2020.

ii) The Dearness Allowance payable in respect of those employees continuing in the pre-revised scale of G.O. (P) No. 85/2011/Fin dated 26.02.2011 will be enhanced from the existing rate of 121% to 127% w.e.f. 01.01.2019, 137% w.e.f. 01.07.2019, 147% ww.e.f. 01.01.2020 and 155% w.e.f. 01.07.2020.

iii) The Dearness Allowance payable in respect of those employees continuing in the pre-revised scale of G.O.(P0 No. 145/2006/Fin dated 25.03.2006 will be enhanced from the existing rate of 275% to 286% w.e.f. 01.01.2019, 303% w.e.f. 01.07.2019, 320% w.e.f. 01.01.2020 and 334% w.e.f. 01.07.2020.

iv) The Dearness Allowance payable in respect of teachers coming under UGC/AICTE/ Medical Education Schemes (in whose case DA up to 50% has been converted as Dearness Pay) will be enhanced from the existing rate of 284% to 295% w.e.f. 01.01.2019, 312% w.e.f. 01.07.2019, 329% w.e.f. 01.01.2020 and 343% w.e.f. 01.07.2020.

v) The Dearness Allowance payable in respect of the teaching staff coming under UGC/AICTE/ Medical Education Schemes who have changed over to revised UGC/AICTE scale from 01.01.2006 or thereafter and Judicial Officers will be enhanced from the existing rate of 148% to 154% w.e.f. 01.01.2019, 164% w.e.f. 01.07.2019, 174% w.e.f. 01.01.2020 and 182% w.e.f. 01.07.2020.

vi) The DA payable in respect of teaching staff coming under UGC/AICTE/Medical Education Schemes who have changed over to revised UGC/AICTE scale from 01.01.2016 or thereafter will be 2% w.e.f. 01.07.2016, 4% w.e.f. 01.01.2017, 5% w.e.f. 01.07.2017, 7% w.e.f. 01.01.2018, 9% w.e.f. 01.01.2018, 12% w.e.f. 01.01.2019, 17% w.e.f. 01.07.2019, 21% w.e.f. 01.01.2020 and 25% w.e.f. 01.07.2020. The Dearness Allowance payable to those employees who are continuing in the 1997 pay scales even after 01.01.2019 will be enhanced from the existing rate of 334% to 345% w.e.f. 01.01.2019, 362% w.e.f. 01.07.2019, 379% w.e.f. 01.01.2020 and 393% w.e.f. 01.07.2020 (up to the date of effect of option under Pay Revision 2014). **The freezed Dearness Relief of all Pensioners, who are drawing Dearness Relief at central rates, will be granted on restoration of the same by Government of India only.**

vii) The Dearness Allowance payable to those employees in Public Sector Undertakings who were getting pay and allowances based on the scales of pay admissible under 1992 Pay Revision will be enhanced as follows with effect from 01.01.2019, 01.07.2019, 01.01.2020 and 01.07.2020.

| Date of effect | Pay Range | Rate of DA per month |
|---|---|---|
| 01.01.2019 | Basic pay up to Rs. 3,500/- p.m.<br>Basic pay above Rs. 3,500/- p.m. upto Rs. 6,000/-<br>Basic pay above Rs. 6,000/- of Rs. 54,000/- | 997% of Pay<br>900% of Pay subject to a minimum of Rs. 34,895/- p.m.<br>861% of pay subject to a minimum |
| 01.07.2019 | Basic pay up to Rs. 3,500/- p.m.<br>Basic pay above Rs. 3,500/- p.m. upto Rs. 6,000/-<br>Basic pay above Rs. 6,000/- of Rs. 56,520/- | 1039% of Pay<br>942% of Pay subject to a minimum of Rs. 36,365/- p.m.<br>903% of pay subject to a minimum |
| 01.01.2020 | Basic pay up to Rs. 3,500/- p.m.<br>Basic pay above Rs. 3,500/- p.m. upto Rs. 6,000/-<br>Basic pay above Rs. 6,000/- of Rs. 59,040/- | 1081% of Pay<br>984% of Pay subject to a minimum of Rs. 37,835/- p.m.<br>945% of pay subject to a minimum |
| 01.07.2020 | Basic pay up to Rs. 3,500/- p.m.<br>Basic pay above Rs. 3,500/- p.m. upto Rs. 6,000/-<br>Basic pay above Rs. 6,000/- of Rs. 61,080/- | 1115% of Pay<br>1018% of Pay subject to a minimum of Rs. 39,025/- p.m.<br>979% of pay subject to a minimum |

viii) The Dearness Allowance at the enhanced rate will be paid in cash along with the salary for the month of March 2021 onwards and arrears up to February 2021 will be merged in the PF Account.

ix) The enhanced rate of Dearness Allowance will also be applicable to Part-time and Part-time contingent employees on the basis of pay drawn by them.

x) (a) The Dearness Relief payable to State Service Pensioners, Family Pensioners, Ex-gratia Pensioners / Ex-gratia Family pensioners (whose Pension / Family Pension has been revised as per

G.O. (P0 No. 09/2016/Fin, dated 20.01.2016) will be enhanced from the existing rate of 20% to 23% with effect from 01.01.2019, 28% w.e.f. 01.07.2019, 32% w.e.f. 01.01.2020 and 36% w.e.f. 01.07.2020.

((b) The Dearness Relief payable to UGC Pensioners / Family Pensioners (whose Pension / Family Pension has been revised as per G.O. (P) No. 151/2020/Fin. dated 05.11.2020) will be enhanced from the existing rate of 9% to 12% w.e.f. 01.01.2019, 17% w.e.f. 01.07.2019, 21% w.e.f. 01.01.2020 and 25% w.e.f. 01.07.2020.

(c) The Dearness Relief payable to UGC Pensioners / Family Pensioners whose Pension / Family Pension has not been undergone revision as per G.O. (P) No. 151/2020/Fin dated 05.11.2020 will be enhanced from the existing rate of 148% to 154% w.e.f. 01.01.2019, 164% w.e.f. 01.07.2019, 174% w.e.f. 01.01.2020 and 182% w.e.f. 01.07.2020.

xi) Re-employed pensioners whose pay has been revised as per G.O. (P) No. 2/17/Fin dated 04/01/2017 are eligible for payment of Dearness Allowance at the enhanced rate of 23% w.e.f. 01.01.2019, 28% w.e.f. 01.07.2019, 32% w.e.f. 01.01.2020 and 36% w.e.f. 01.07.2020 as admissible to State Government Employees and they are eligible for this enhanced rate of Dearness Allowance based on a general letter of authority issued by the Accountant General.

xiii) The Dearness Relief payable to State Service Pensioners and Family Pensioners (whose Pension/ Family Pension has not undergone revision as per G.O. (P0 No. 09/2016/Fin. dated 20.01.2016) will be enhanced from the existing rate of 121% to 127% w.e.f. 01.01.2019, 137% w.e.f. 01.07.2019, 147% w.e.f. 01.01.2020 and 155% w.e.f. 01.07.2020.

xiii) The Dearness Relief payable to State Service Pensioners and Family Pensioners /whose Pension / Family Pension has not undergone revision as per G.O. (P0 No. 87/2011/Fin. dated 28.02.2011, and also to the Pensioners / Family Pensioners coming under UGC/AICTE /Medical Education Schemes (who retired prior to 01.07.2004 and whose family pension has been revised as per G.O. (P) No. 81/ 2007/Fin. dated 28.02.2007 and whose pension has not undergone revision as per G.O. (P) No. 211/ 2011/Fin dated 07/05/2011), will be enhanced from the existing rate of 275% to 286% w.e.f. from 01.01.2019, 303% w.e.f. 01.07.2019, 320% w.e.f. 01.01.2020 and 334% w.e.f. 01.07.2020.

xiv) The Dearness Relief payable ro retired State Judicial Officers (who are drawing Dearness Relief at central rates and whose Pension / Family Pension has not been revised as per G.O. (Ms) No. 236/10/Home dated 02.11.2010) and the Pensioners / Family Pensioners, coming under the category UGC/AICTE/Medical Education Schemes (who retired after 01.07.2004 and whose Pension / Family Pension has been revised as per G.O. (P0 No. 84/2007/Fin dated 01.03.2007 and has not undergone revision as per G.O. (P) No. 211/2011/Fin dated 07/05/2011) will be enhanced from the existing rate of 284% w.e.f. 01.01.2019, 312% w.e.f. 01.07.2019, 329% w.e.f. 01.01.2020 and 343% w.e.f. 01.07.2020.

xv) The Dearness Relief payable in respect of Ex-Chairman and Members of Kerala Public Service Commission, will be enhanced as follows w.e.f. 01.01.2019, 01.07.2019, 01.01.2020 and 01.07.2020.

| *Category* | *Date of termination of service* | *Rate of Dearness Relief* |
|---|---|---|
| Chairman and Members who were appointed from outside Government service and whose pension structure was modified as per G.O. (P) No. 23/2017/GAD dated 21/08/2017 | Prior to on or after 01.01.2006 | w.e.f. 01/01/2019 is 154%<br>w.e.f. 01/07/2019 is 164%<br>w.e.f. 01/01/2029 is 174% and w.e.f.. 01/07/ 2020 is 182% |

| | | |
|---|---|---|
| Chairman and Members having prior service in Government and opted benefits of combined service | Prior to on or after 01.10.2006 | w.e.f. 01/01/2019 is 127%<br>w.e.f. 01/07/2019 is 137%<br>w.e.f. 01/01/2010 is 147%<br>and w.e.f. 01/07/2020 is 155% |

xvi) The rate of Dearness Relief paable to the teaching staff coming under UGC/AICTE/Medical Education Streams who have changed over to revised UGC/AICTE scale from 01.01.2006 and those who retired after 01.01.2006 and that to the State Judicial Officers whose pension has been revised as per G.O. (Ms.) No. 236/2010/Home dated 02.11.2010, will be enhanced from the existing rate of 148% to 154% w.e.f. 01.01.2019, 164% w.e.f. 01.07.2019, 174% w.e.f. 01.01.2020 and to 182% w.e.f. 01/07/2020. This rate will be adopted only after the formal sanctioning of revision of their pension in terms of G.O. (P) No. 211/2011/Fin dated 07.05.2011. The teaching staff coming under the UGC/AICTE/Medical Education Streams who have retired prior to 01.01.2006 and whose pension has been revised in terms of G.O. (P0 No. 211/2011/Fin dated 07.05.2011 will also be eligible for Dearness Relief at the above rate.

xvii) The Dearness Relief payable in respect of the State Service Pensioners / Family Pensioners whose pension has not undergone revision as per G.O. (P0 No. 180/2006/Fin. dated 18.04.2006 and who are drawing Pension / Family Pension as per Pension Revision 1997, and in respect of Pensioners / Family Pensioners coming under UGC/AICTE/Medical Education Schemes whose pension has not undergone revision as per G.O. (P) No. 81/2007/Fin. dated 28.02.2007 or G.O. (P0 No. 84/2007/Fin dated 01.03.2007 will be enhanced drom the existing rate of 334% to 345% w.e.f. 01.01.2019, 362% w.e.f. 01.07.2019, 379% w.e.f. 01.01.2020 and to 393% w.e.f. 01/07/2020. This will be applicable only till such date of effect of option for Pension Revision 200, after which the Dearness Relief payable will be as indicated in para 2(xiii) above and after the date of effect of option for Pension Revision 2009, Dearness Relief will be payable as indicated in para 2(xii) above.

3. The revised rate of Dearness Allowance due from 01/01/2019 to 01/07/2020 may be paid in cash along with the salary of March 2021 onwards and the arrears up to February 2021 will be merged to PF Account. Withdrawal of arrears of DA credited into the PF Account for the installments due from 01.01.2019 (3%), 01.07.2019 (5%), 01.01.2020 (4%) and 01.07.2020 (4%) shall be made only after 01.04.2023, 01.09.2023, 01.04.2024 and 01.09.2024 respectively or after retirement which ever is earlier. **The freezed Dearness Allowance of all employees, who are drawing Dearness Allowance at central rates, will be granted on restoration of the same by Government of India only.**

4. The revised Dearness Relief due from 01.01.2019 to 01.07.2020 may be paid along with the pension of April 2021 onwards. The arrears of the Dearness Relief shall be paid in cash in four equal installments made on April 2021, June 2021, September 2021 and December 2021.

5. The conditions laid down in the Government Order read as 7th paper above shall be applicable while regulating Dearness Allowance / Dearness Relief under thse orders.

6. The G.O. read 15th paper above stands cancelled.

**(By order of the Governor)**

**RAJESH KUMAR SINGH**
Additional Chief Secretary to Government (Finance)

# தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன்
# TAMILNADU ELECTRICITY BOARD EMPLOYEES FEDERATION

பதிவு எண் : 3600 / CNI

39/101, சிங்கண்ண தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002. ✆ : 9841446621

தலைவர் **S. மணிகண்டன்** | **A. சேக்கிழார்** பொதுச்செயலாளர் | பொருளாளர் **J. லூர்து பாஸ்டின் ராஜ்**

செயல் தலைவர் **K. செல்வராஜ்** | அமைப்புச் செயலாளர் **S. இராமநாதன்**


நாள் : 25.01.2021

**அன்பிற்கினிய தோழர்களே! வணக்கம்.**

கடந்த ஆண்டில் 12.12.2020 அன்று திருச்சியில் நடைபெற்ற மாநில செயற்குழு முடிவின்படி மண்டல அளவிலான செயற்குழு நடத்துவதில் திட்டமிட்டபடி 24.01.2021 அன்று நெல்லையில் திருநெல்வேலி மண்டலச் செயற்குழு சிறப்புடன் நடைபெற்றுள்ளது.

திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி, கன்னியாக்குமரி மின்விநியோக வட்டங்களிலிருந்தும், தூத்துக்குடி அனல் மின்நிலையம் மற்றும் திருநெல்வேலி உற்பத்தி வட்டம், திருநெல்வேலி மரபு சாரா எரிசக்தி ஆதாரங்கள் வட்டத்திலிருந்தும் நிர்வாகிகளும், பிரிவு பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

மூத்த மாநில உபதலைவரும் தூத்துக்குடி மின்வட்ட தலைவருமான தோழர் M. சுப்பிர மணியன் அவர்கள் தலைமை வகித்து சிறப்புடன் செயற்குழுவினை வழிநடத்தினார்கள்.

மாநிலத் தலைவர் தோழர் S. மணிகண்டன் அவர்கள் மண்டலச் செயற்குழுவினை தொடங்கி வைத்து பேருரை நிகழ்த்தினார்கள்.

செயற்குழுக் கூட்டத்தில் மண்டலத்திற்குட்பட்ட அனைத்து கிளைகளின் தலைவர், செயலாளர், கோட்ட செயலாளர்கள் மற்றும் பிரிவு பிரதிநிதிகள் விவாதத்தில் கலந்து கொண்டனர்.

மாநில பொருளாளர் தோழர் J.L. பாஸ்டின்ராஜ், மாநில அமைப்பு செயலாளர் தோழர் S. இராமநாதன், மாநில உபதலைவர்கள் திரு. N. முத்தையா, திரு. K.R. சுப்பிரமணியன், திரு. K. சிவசுப்பு பாண்டியன், மாநில செயலாளர்கள், திரு. S. ராஜாங்கம், திரு. R. மூக்கையா, திரு. N. பழனி, மண்டல செயலாளர்கள் திரு. N.D.S. அலெக்சாண்டர் (திருநெல்வேலி) திரு. M. ஷாஜஹான், (மதுரை) ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள்.

காலை 10.00 மணிக்கு தொடங்கிய கூட்டம் சிறப்பான விவாதங்களை மேற்கொண்டதில் பொதுச்செயலாளர் விவாதங்களுக்கு பதிலளித்து நிறைவுரையாற்றிய பின்னர் செயற்குழு உறுப்பினர்களின் விவாதத்திற்கு பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்ற பட்டன.

1. **பிப்ரவரி 3ம் தேதி நடைபெற உள்ள வேலை நிறுத்தப் போராட்டத்தினை வெற்றி கரமாக்கிட மின்சார வாரியத்தில் பணியாற்றும் அனைவரையும் பங்கெடுத்திட வைப்பது என தீர்மானிக்கப்பட்டது.**
2. **K2, மற்றும் சிட் அக்ரிமன்ட்ல் பணியாற்றி வரும் ஒப்பந்த தொழிலாளர்களை 22.02.2018 ஊதிய உயர்வு ஒப்பந்தத்தில் உள்ள ரூ. 380/- தினஊதியம் அளித்து மின்சார வாரியமே நேரடியாக பணிக்கமர்த்திட வேண்டும்.**

3. **கேங்க்மேன் நேரடி நியமனம் சென்னை உயர்நீதிமன்ற வழக்கிற்குட்பட்டு செய்திட வேண்டும், தேர்வை எழுதியுள்ள 15000 பேரையும் பணிக்கமர்த்திடல் வேண்டும்.**

4. **சுகாதாரப் பணிகளை மேற்கொண்டு வருபவர்களை விடுத்து புதிதாக ஒப்பந்த அடிப்படையில் செய்திடாமல் ஏற்கனவே பணியாற்றி வருபவர்களுக்கு அடிப்படை சம்பளம் அளித்து பணியில் தொடர வைத்திடல் வேண்டும்.**

5. **நிர்வாகப் பிரிவில் SPO பதவியோடு 51 பதவிகளை ஒழித்துள்ள Per CMD TANGEDCO Proceedings No. 14 Dt. 20th January 2021ஐ மின்சார வாரியம் திரும்ப பெற வேண்டும்.**

6. **14.12.2020 வாரியத் தலைவரோடு பேச்சுவார்த்தை நடத்திய அனைத்து கோரிக்கை மீதும் உடனடி நடவடிக்கை எடுத்து உத்தரவிட வேண்டும்.**

7. **திருநெல்வேலி மாவட்டத்தை இரண்டாக பிரித்து தென்காசியை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் தொடங்கியுள்ளதின்படி தமிழ்நாடு மின்சார வாரியமும் விரைவாக தென்காசி மின்பகிர்மான வட்டத்தை உருவாக்கிட வேண்டும்.**

இதர மண்டலங்களான ஈரோடு மண்டலம் 27.02.2021, கோவை மண்டலம் 28.02.2021, திருச்சி மண்டலம் 14.03.2021, மதுரை மண்டலம் 28.03.2021, சென்னை மண்டலம் 11.04.2021, விழுப்புரம் மண்டலம் 18.04.2021, வேலூர் மண்டலம் 25.04.2021 ஆகிய தேதிகளில் சிறப்பாக நடத்திட அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டிட வேண்டுகிறோம்.

மண்டலக் கூட்டங்களில் திட்டத்தில் உள்ள தலைமை பொறுப்பாளர்கள் தலைவர், செயலாளர், பொருளாளர், அமைப்பு செயலாளர் மற்றும் செயல் தலைவர் என 5 பேர், கோட்ட தலைவர், செயலாளர், இணைச் செயலாளர் என 3 பேர், கோட்டத்திலிருந்து திட்டத்திற்கு ஒரு துணைத் தலைவர், ஒரு இணைச் செயலாளர் என 2 பேர், பிரிவுக்கு ஒரு பிரதிநிதி வீதம் அனைத்து பிரிவுக்கும் பிரிவு பிரதிநிதிகள் என திட்டத்திலிருந்து மேற்கண்ட அனைவரும் கலந்திட வேண்டும்.

மேற்கண்ட அளவில் திட்டத்தில் நிர்வாகிகள் அமைப்பை உருவாக்காமல் உள்ளவர்கள் அந்தந்த மண்டலக் கூட்டங்கள் நடைபெறுவதற்கு முன்னர் இப்பணியை முடித்திடல் வேண்டும்.

மேற்கண்ட நிர்வாகிகளின் பட்டியலில் பெயர், முகவரி, பிறந்த தேதி, இரத்தவகை, கைபேசி எண், புலனம் எண், மின்னஞ்சல் முகவரி யாவும் குறிப்பிட்டு பட்டியலை கூட்டத்தில் தவறாமல் அளித்திட வேண்டும்.

தமிழக அளவில் பல்வேறு துறைகளிலிருந்தும், அமைப்பு சாரா பணிகளிலிருந்தும் தொழிற்சங்க பணியாற்றக் கூடிய அமைப்பினர் பலர் ஒன்று சேர்ந்து பொதுவான ஜனநாயகரீதியான ஜாதி மத அரசியலுக்கு அப்பாற்பட்டு சுதந்திரமான தொழிற்சங்க அமைப்பு ஒன்றைத் தொடங்கி தொழிலாளர்கள் நலன் பேண ஏற்கனவே நாமும் சேர்ந்து எடுத்துள்ள முடிவின்படி 'தமிழக உழைக்கும் மக்கள் முன்னணி' என்ற அமைப்பினை துவக்கும் விழாக் கூட்டம் எதிர்வரும் 31.01.2021 ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு திருச்சி உறையூர் கைத்தறி நெசவாளர் திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

மேற்கண்ட கூட்டத்தில் நமது எம்ப்ளாயீஸ் பெடரேஷன் சார்பாக மாநில நிர்வாகிகள் மண்டல, திட்ட செயலாளர்கள், கலாந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி!

தோழமையுள்ள,
**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

# தமிழ்நாடு மின்வாரிய தொழிற் சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு

**சென்னை**

பெறுநர் நாள்: 02.02.2021

**மாண்புமிகு மின்துறை அமைச்சர்** அவர்கள்

தமிழ்நாடு அரசு, புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.

ஐயா,

வணக்கம்

பொருள் : ***மின்வாரிய ஊழியர்களின் நீண்ட நாட்களாக தீர்க்கப்படாத பிரச்சனைகளை தீர்வு காண உரிய நடவடிக்கை எடுக்கக் கோருதல் - தொடர்பாக.***

எங்களது வேண்டுகோளை ஏற்று வாரிய ஆணை 82. நாள் 16.12.2020 மற்றும் ஐந்து துணை மின்நிலையங்களை works contract என்ற பெயரில் பராமரிப்பு மற்றும் இயக்க பணிகளை ஒப்பந்த முறையில் வழங்க இருந்த உத்திரவுகளை திரும்ப பெற்றுக் கொண்டமைக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இருப்பினும் தற்போது உள்ள சூழலில் வாரிய நிர்வாகத்தில் உள்ள தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், இணை மேலாண்மை இயக்குநர் ஆகியோர் தொழிலாளர்களுக்கு விரோதமான நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்து வருவதை தங்களது கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம்.

1. **வாரிய ஆணை 82 நாள்: 16.12.2020 உத்திரவு திரும்ப பெற்றிருப்பினும், வட்ட மேற்பார்வை பொறியாளர்களுக்கு works contract விடுவதற்கு வாரிய ஆணை 1, நாள் 6.1.2021 மூலம் மின்வாரிய நிர்வாகம் உத்திரவு பிறப்பித்துள்ளது. இது வாரிய ஆணை 82-ன் மறுபதிப்பு என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறோம். எனவே, இந்த வாரிய ஆணை 1. நாள்: 6.1.2021-ஐ ரத்து செய்ய கேட்டுக் கொள்கிறோம்.**

2. **தற்போதைய வாரியத் தலைவர் அவர்களால் வெளியிடப்பட்ட, பணியாளர்களின் இடப்பெயர்ச்சி (Redeployment) பதவிகளை ஒழித்தல் (Post Abolishing) (இணைப்பில் உத்திரவுகள் உள்ளது) ஆகிய உத்திரவுகளை ரத்து செய்ய வேண்டும்.**

3. **புதியதாக உருவாக்கப்பட்ட 63 பிரிவு அலுவலகங்களுக்கு பிரிவு அலுவலர் (உதவிப் பொறியாளர்) பதவிகள் அனுமதிக்கப்படாமல் உள்ள காரணத்தால் ஏற்கனவே அனுமதி அளித்த பதவிகளை பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. இதனால் நுகர்வோர் சேவை பாதிக்கப்படுகிறது.**

   **அதே போல, வேலைக்களு ஒப்பந்தத்தின்படி பெருகி வரும் மின் இணைப்புக்கள் மற்றும் மின் மாற்றிகளுக்கு ஏற்ப ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 1-ம் தேதியன்று புதிய பதவிகள் அனுமதி அளித்திட வேண்டும்.**

4. **5 துணை மின் துணை நிலையங்களின் பராமரிப்பு மற்றும் இயக்கப் பணிகளை அவுட்சோர்சிங் விடப்பட்ட உத்திரவுகளை மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் ரத்து செய்யப்பட்ட நிலையில் இந்த துணை மின் நிலையங்களுக்கான பதவிகள் அனுமதிக்கப்படவில்லை. அதே போல பண்டகசாலை, மின்பாதைகள், சிறு, புனல் உற்பத்தி நிலையங்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட உத்திரவுகளை ரத்து செய்ய வேண்டும்.**

   **மேலும் புதிதாக துவங்கப்பட்டு பயன்பாட்டுக்கு வந்த 80-க்கும் மேற்பட்ட 110 கே.வி. 33 கே.வி. துணை மின் நிலையங்களுக்கு பதவிகள் அனுமதிக்கப்படாத காரணத்தினால் விநியோக பிரிவில் உள்ள பணியாளர்கள் பணிகள் கூடுதலாக இந்த பணியை பார்க்க வேண்டியுள்ளது. இதனால் பகிர்மான பணிகள் பாதிக்கப்படுகிறது. ஆகவே, உடனடியாக பதவிகள் அனுமதித்திட வேண்டும்.**

5. **புதிய மின்உற்பத்தி திட்டங்களில் பொறியாளர்களையும், அலுவலர்களையும், பணியாளர்களையும் பயன்படுத்தாமல் அங்கு ஆட்களை குறைப்பது ஒப்பந்ததாரர்கள் தவறு செய்வதற்கு உதவுவதோடு, கட்டுமான பணிகளிலும் தொய்வு ஏற்படும். இது மின் உற்பத்தியை துவக்குவதில் காலதாமதத்தை உருவாக்கும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். மேலும் தவறுதலாக மேற்கொள்ளப்படும் கட்டுமானப்**

**பணிகளை இவ்விஷயத்தில் தேர்ந்த பொறியாளர்களால் அவ்வப்போது சரி செய்யாவிட்டால் மின் உற்பத்தியை வெகுவாக பாதிக்கும் என்பதை தங்களின் கவனத்தில் கொண்டு வர விரும்புகின்றோம்.**

6. **மின்வாரிய மறுசீரமைப்பு தொடர்பாக தொழிற்சங்கங்கள் அளித்துள்ள கருத்துக்களை ஏற்று மின்வாரியத்தில் பணியாற்றி வரும் பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியர்களுக்கு ஏற்கனவே பெற்று வரும் சலுகைகள் மற்றும் சமூக பாதுகாப்பை உறுதிப்படுத்திடும் வகையில் தொழிற்சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்தி தமிழக அரசின் உத்திரவாதத்துடன் முத்தரப்பு ஒப்பந்தம் ஏற்படுத்திட நடவடிக்கை எடுத்திட வேண்டும்.**
7. **அனைத்து ஆரம்ப கட்ட பதவிகளை உடனடியாக நிரப்பிட வேண்டும்.**
8. **பணியாளர்களின் பணிக்காலத்தில் குறைந்தபட்சமாக மூன்று பதவி உயர்வுகள் அளித்திட ஏற்கனவே ஒப்பந்தத்தில் உள்ளதை நிர்வாகம் அமல்படுத்தாமல் உள்ளது. காலநிலை பதவி உயர்வுகள் வழங்கிட உறுதி செய்யப்பட வேண்டும்.**
9. **01.12.2019 முதல் மின்வாரிய பணியாளர்களுக்கு வழங்கிட வேண்டிய ஊதிய உயர்வு - தொடர்பாக ஊதிய உயர்வுக்குழு தொழிற்சங்கங்களோடு பேச்சுவார்த்தையை துவங்கிட வேண்டும்.**
10. **இணை மேலாண்மை இயக்குநர் / TANGEDCO அவர்கள் களச்சூழலை புரிந்து கொள்ளாமலும், அனுபவமிக்க பொறியாளர்கள் இயக்குநர்களாக இருக்கின்ற நிலையில் அவர்களை கலந்து ஆலோசிக்காமல் உத்திரவுகளை பிறப்பிப்பதும், அதன்பின் திரும்ப பெற்றுக் கொள்வது பல நடைமுறை சிக்கல்களை உருவாக்கி, அரசுக்கு அவப்பெயரை உண்டாக்கும் நிலையை ஏற்படுத்தி வருகிறது.**

எனவே, மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக கவனம் செலுத்தி மின்வாரிய நிர்வாகத்தில் தொழில் அமைதியையும், தொழிற் உறவையும் பாதுகாத்திட நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள




## தமிழ்நாடு மின்வாரிய தொழிற் சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு, சென்னை

நாள்: 02.02.2021

மின்வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களிடமும் மாண்புமிகு மின்துறை அமைச்சரிடமும் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு எட்டப்படாத கோரிக்கைகள்.

1. **அரசு ஆணை 304, 17.06.2020, அடிப்படையில் கொரோனா தொற்று காலத்தில் பொது போக்குவரத்து இல்லாத காரணத்தால் பணிக்கு வர இயலாதவர்களுக்கு 25.03.2020 முதல் 17.05.2020 வரை சிறப்பு விடுப்பு வழங்கியுள்ளதை இன்று வரை அமலாக்கம் செய்யப்படவில்லை.**

கொரோனா தொற்று பாதிக்கப்பட்டாலோ அல்லது கட்டுப்படுத்தல் பகுதிக்குள் அவர்களது குடியிருப்பு இருந்தால் அந்த காலத்திற்கு சிறப்பு விடுப்பு அனுமதிக்கப்பட வேண்டியது அமலாகவில்லை.

2. கொரோனா தொற்று நோய்க்கு பாதிக்கப்பட்டு இறந்துபோன முன் களப்பணியாளர்களான மின்வாரிய ஊழியர்களுக்கு ரூ. 25 லட்சம் வழங்கிட வேண்டும்.

3. ஈட்டிய விடுப்பை ஒப்புவிப்பு செய்கின்ற சலுகையை 27.4.2020 முதல் ஓராண்டுக்கு வாரிய நிர்வாகம் நிறுத்தி வைப்பதற்கு பதிலாக பல்வேறு மின் வட்டங்களில் நிதி ஒதுக்கீடு செய்யாத காரணத்தால் அக்டோபர் -2019-ம் மாதத்திலிருந்து அனுமதி அளித்ததை ரத்து செய்துள்ளனர். வாரிய தலைமையகம் உள்ளிட்ட சில இடங்களில் மார்ச் 2020 வரை தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்த முரண்பாடுகள் களைப்படவில்லை.

4. சம்பள பட்டுவாடா சட்டத்தின் அடிப்படையில் தொழிலாளி விருப்ப கடிதம் சமர்ப்பிக்கும் பட்சத்தில் அவரது சம்பளத்திலிருந்து உறுப்பினர் சந்தா மற்றும் நன்கொடை பிடித்தம் செய்து வழங்கும் நடைமுறையை மின்வாரிய நிர்வாகம் ரத்து செய்துள்ளதை திரும்ப பெற வேண்டும்.

5. ஐந்து அனல் மின்சார நிலையங்களின் வேலை ஒதுக்கீடு பணியாளர் நிலை (Work Allocation and Staff Pattern) ஆய்வு செய்வதற்கு தேசிய உற்பத்திக் குழு (National Productivity Council) என்ற வெளி ஆலோசனைக்குழுவிற்கு ரூ. 2,87,60,000/- விடப்பட்ட உத்தரவை மின்வாரிய நிர்வாகம் ரத்து செய்திட வேண்டும்.

6. பகுதி நேர பணியாளர்கள் ஏற்கனவே மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்சமாக ரூ. 1000/- பெற்று வந்தவர்களை திடீரென நிறுத்திவிட்டு தொழிற்சங்கங்கள் வற்புறுத்தலின் காரணமாக பிறகு விவரங்களை கோரி ஒரு பகுதியினருக்கு உத்தரவு வழங்கி பலருக்கு உத்தரவு வழங்கப்படாத நிலை உள்ளது. ஆனால், அவர்களை பணி நிரந்தரப்படுத்துவதற்கு பதிலாக அவுட்சோர்சிங் முறையை கையாண்டுள்ளது. இந்த அவுட்சோர்சிங் முறையை ரத்து செய்திடல் வேண்டும்.

7. மின்வாரியத்தில் பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்களை அடையாளங்கண்டு அவர்களுக்கு 22.02.2018-ல் ஏற்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் தினக்கூலி ரூ. 380/- மின்வாரியமே நேரிடையாக வழங்கிட வேண்டும்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள

தமிழ்நாடு மின்சார தொழிலாளர் சம்மேளனம்

கணக்காயர் களத் தொழிலாளர் சங்கம்

தொழிலாளர் முன்னேற்ற சங்கம்

தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு(சிஐடியூ)

மின்வாரிய ஜனதா தொழிற் சங்கம்

ஐ.என்.டி.யு.சி (சேவியர்)

ஐ.என்.டி.யு.சி (சொர்ணராஜ்)

மின்வாரிய பொறியாளர் சங்கம்

தமிழ்நாடு மின் ஊழியர் காங்கிரஸ் (என்.எல்.ஓ)

தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம்(HMS)

மின்வாரிய பொறியாளர் கழகம்

கணக்கு அலுவலர் சங்கம்

காட்டு பில்லிங் ஸ்டாப் யூனியன்

டாக்டர் அம்பேத்கர் யூனியன்

மின்வாரிய பொறியாளர் யூனியன்

எம்ப்ளாயீஸ் பெடரேஷன்

## தொழிலாளர்களின் ஊதியத்தில் தொழிற்சங்கங்களுக்கு சந்தா பிடித்திட நிறுத்திய உத்தரவினை திரும்ப அளித்த உத்தரவு

### Tamil Nadu Generation and Distribution Corporation Limited

Secretariat Branch
144, Anna Salai,
Chennai - 600 002.

**Memo (Per.) No. 43915/A3/A31/2020-1, Dated : 4.2.2021**

***Sub :*** *TANGEDCO - Union - Deduction of Annual Subscription from the salary of willing Member employees - Orders - Issued.*

***Ref :*** *Memo (Per.) No. 39962/A3/A31/2020-1, Dated : 18.11.2020.*

*****

In the Board's Proceedings cited, orders were issued to cancel/dispense off with the scheme of deduction of Annual Union Subscription/Donation from the salary of te employees of TANGEDCO.

2. Various Unions had represented for retaining the above system. In case of their request, the matter has been examined and it is hereby ordered that deduction of Annual Membership fees from the salary of willing Member employees to their Unions may be permitted as per Payment of Wages Act, 1936.

3. The Member employees shall submit their willingness to the Controlling Officer/Pay disbursing Officer for the above deduction. An employee shall be permitted deduction of only one Membeship fee.

4. The receipt of the Memo. shall be acknowledged.

**(BY ORDER OF THE CHAIRMAN CUM MANAGING DIRECTOR)**

**M. BHAVANI**
Secretary

## நிர்வாகக் கிளையில் SPO பதவிக்கு பதவி உயர்வுக்கான தகுதிப் பட்டியல்

### Tamil Nadu Generation and Distribution Corporation Limited

**(Abstract)**

Establishment - Tamil Nadu Generation and Distribution Corporation Limited - Class I Service - Panel of Personnel Officers fit for promotion as Senior Personnel Officers for the year 2020-2021 - Approved.

---

**(Secretariat Branch)**

(Per.) CMD TANGEDCO Proceedings No. 28

Dated the 03rd February 2021
Thai 21 Saarvari Varudam
Thiruvalluvar Aandu 2052

**PROCEEDINGS:-**

